# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 20 செவ்வாய்க்கிழமை 05.08.2025 கதிர் 276



யாழ் மண்ணிலிருந்து இணைய வெளிக்கு -
யாழ் முற்றம்
Yarl Muttram
Youtube Channel



# பதவியிலிருந்து நீக்கப்பட்டார் பொலிஸ்மா அதிபர் தேசபந்து!

## 177 பெரும்பான்மை வாக்குகளால் சபையில் தீர்மானம் நிறைவேற்றம்

கொழும்பு, ஓக. 05

பணியிடை நீக்கம் செய்யப்பட்டுள்ள பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அவரது பதவியிலிருந்து நீக்கப்பட்டுள்ளார்.

2002 ஆம் ஆண்டு 5 ஆம் இலக்க அதிகாரிகளை நீக்குதல் (நடைமுறை) சட்டத்தின் பிரிவு 17 இன் கீழ், பதவி இடைநீக்கம் செய்யப்பட்ட பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான தீர்மானத்தின் மீதான விவாதம் இன்று நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இந்தநிலையில் விவாதத்தின் இறுதியில் பதவி நீக்கம் தொடர்பான வாக்கெடுப்பு இடம்பெற்றது.

இதன்படி தேசபந்து தென்னக்கோனைப் பதவியில் இருந்து நீக்குவதற்கான பிரேரணை 177 பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

அதற்கு ஆதரவாக 177 வாக்குகளும், எதிராக எந்தவொரு வாக்குகளும் அளிக்கப்படாத நிலையில் வாக்களிப்பில் இருந்து ஓர் உறுப்பினர் (மொட்டுவின் எம்.பி. நாமல் ராஜபக்ஷ) மாத்திரம் விலகியிருந்தார்.

இதன்படி,பொலிஸ்மா அதிபர் பதவியிலிருந்து தேசபந்து தென்னக்கோன் நீக்கப்பட்டுள்ளார்.



## சபையில் சபாநாயகருடன் நாமல் எம்.பி. வாய்ச்சண்டை

கொழும்பு, ஓக. 05

நிலையியற் கட்டளை 98 இன் பிரகாரம் நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்ததைத் தொடர்ந்து சபாநாயகருக்கும், நாமல் ராஜபக்ஷவுக்கும் இடையில் கடும் தர்க்கம் ஏற்பட்டது.

நாடாளுமன்றத்தில் 7



## ரணிலின் செயலர் சமன் சி.ஐ.டியில் வாக்குமூலம்

கொழும்பு, ஓக. 05

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இன்று செவ்வாய்க்கிழமை முன்னிலையாகி வாக்குமூலம் வழங்கினார்.

ஜனாதிபதி நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்பட்ட 7





## தமிழ் டயஸ்போராக்களால் மஹிந்தவுக்குப் பேராபத்து!

### பாதுகாப்பு அவசியம் என்கிறது ஐ.தே.க.

கொழும்பு, ஓக. 05

“இலங்கையில் ஆயுதப் போரை முடிவுக்குக் கொண்டு வந்த மஹிந்த ராஜபக்ஷ மீது தமிழ் டயஸ்போராக்கள் சிலர் ,ன்னமும் வைராக்கியத்துடனேயே உள்ளனர். ,தனால் அவரைப் பழிவாங்க முற்படக்கூடும். எனவே, அவர் உட்பட முன்னாள் ஜனாதிபதிகளுக்குப் 7

## புலிகளிடமிருந்து நாட்டைக் காத்த படையினர் போர்க்குற்றவாளிகளா?



### நாமல் கடும் சீற்றம்

கொழும்பு, ஓக. 05

“விடுதலைப்புலிகள் அமைப்புக்கு நிதி வழங்கியவர்கள் முதலீட்டாளர்க ளாகவும், 7

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



# யாழில் 23 மில்லியன் மதிப்புள்ள கேரள கஞ்சா மீட்பு

கொழும்பு, ஓக 05

யாழ்ப்பாணம், கடைக்காடு, அலியாவேலி கழப்பு அருகே இலங்கை கடற்படை நடத்திய சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, சுமார் நூற்று இரண்டு (102) கிலோகிராம் மற்றும் முந்நூற்று ஐம்பது (350) கிராம் (ஈரமான எடை) கேரள கஞ்சா, இருபத்தி மூன்று (23) மில்லியன் ரூபாயை விட அதிகமான தெரு மதிப்புள்ள ஒரு தொகையை கடற்படையனர் திங்கட்கிழமை 04 அன்று கைப்பற்றினர்.

அதன்படி, யாழ்ப்பாணம், கடைக்காடு, அலியாவேலி கழப்புக்கு அருகிலுள்ள பகுதியில் வடக்கு கடற்படை கட்டளையின் வெத்தலக்கேணி கடற்படை நிலையம் நடத்திய இந்த சிறப்பு தேடுதல் நடவடிக்கையின் போது, அப்பகுதியில் உள்ள ஒரு புதரில் வைக்கப்பட்டிருந்த இரண்டு (02) சந்தேகத்திற்கிடமான பொதிகள் அவதானிக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டன. அப்போது,பொதிகளில் அடைக்கப்பட்டிருந்த நூற்று இரண்டு (102) கிலோகிராம் முந் நூற்று ஐம்பது (350) கிராம் (ஈரமான எடை) கேரள கஞ்சா கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

மேலும், கடற்படையால் கைப்பற்றப்பட்ட கேரள கஞ்சாவின் மொத்த தெரு மதிப்பு இருபத்தி மூன்று (23) மில்லியன் ரூபாய்க்கு மேல் இருக்கும் என்று நம்பப்படுகிறது, மேலும் கேரள கஞ்சா தொகையானது மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக மருதங்கேணி பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (ஐ)

# அத்துமீறிய மீன்பிடிப் படகு கைப்பற்றப்பட்டது



கொழும்பு, ஓக 05

இலங்கை கடல் பரப்பில் அத்துமீறிய இந்திய மீன்பிடி படகு ஒன்று மன்னார் வடக்கு கடற்பரப்பில் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டது.

இலங்கை கடற்படையினர், நேற்று முன்தினம் இரவு யாழ்ப்பாணம் நெடுந்தீவிற்கு அன்மித்த கடல் பரப்பில் சட்டவிரோதமாக நுழைந்த சந்தேகத்திற்கிடமான இந்திய மீன்பிடிப் படகை கடற்படையினர் கைப்பற்றினர்.

அத்துடன், 4 இந்திய மீனவர்களையும் கடற்படையினர் கைது செய்தனர்.

அதன்படி வடக்கு கடற்படை கட்டளையினால் யாழ்ப்பாணம் நெடுந்தீவுக்கு அருகில் இலங்கை கடல் எல்லைக்குள் நுழைந்த பல இந்திய மீன்பிடி படகுகளை அவதானித்ததுடன், மேலும் அந்த மீன்பிடி படகுகளை இலங்கை கடல் எல்லை யமிலிருந்து அகற்ற வடக்கு கடற்படை கட்டளையுடன் இணைக்கப்பட்ட கடலோர படகுகளால் ஒரு சிறப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

அங்கு, இலங்கை கடற்படையினர் உள்ளூர் கடல் எல்லையில் ஒரு இந்திய மீன்பிடி படகில் சட்டப்பூர்வமாக ஏறி ஆய்வு செய்து, எல்லைச் சட்டங்களை மீறி இலங்கை கடல் எல்லையில் சட்டவிரோதமாக பயணித்த அந்த இந்திய மீன்பிடி படகுடன் நான்கு இந்திய மீனவர்களும் கைது செய்யப்பட்டனர்.

இந்த நடவடிக்கையின் மூலம் கடற்படை யினரால் கைப்பற்றப்பட்ட இந்திய மீன்பிடி படகு மற்றும் அதில் இருந்த 4 இந்திய மீனவர்களை காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கொண்டு வரப்பட்டு, மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக யாழ்ப்பாணம் மீன்வள ஆய்வாளர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட உள்ளனர். (ஐ)

# யானை தாக்குதலில் இளம் தாய் பலி

மட்டக்களப்பு, ஓக 05

மட்டக்களப்பு ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள மகிழவெட்டுவான் பகுதியில் யானை தாக்குதலில் இளம்தாயார் ஒருவர் உயிரிழந்ததுடன் 3 வயது குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பிய சம்பவம் திங்கட்கிழமை (04) அன்று இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மகிழவெட்டுவானை சேர்ந்த 35 வயதுடைய ரவிச்சந்திரன் பசுபதி என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

குறித்த பிரதேசத்தில் வீட்டின் முற்றத்தில் சம்பவதினமான திங்கட்கிழமை அன்று இரவு 7.00 மணியளவில் தனது 3 வயது பெண் குழந்தையுடன் தாய் இருந்துள்ள நிலையில் குடிமனைக்குள் உட்புகுந்த யானை அவர்கள் மீது தாக்கியதில் தாயார் சம்பவ இடத்திலே உயிரிழந்ததுடன் குழந்தை தெய்வாதீனமாக உயிர் தப்பினார்.

இதையடுத்து உயிர் தப்பிய குழந்தையை மீட்டதுடன் உயிரிழந்தவரின் சடலத்தை மீட்டு வைத்தியசாலையில் அனுமதித்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர. (ஐ)



# திருகோணமலையில் தன்னார்வ தொண்டர் நிறுவன 17 ஊழியர்கள் படுகொலை நினைவேந்தல்








கொழும்பு, ஓக 05

மூதூரில் தன்னார்வ தொண்டு நிறுவன பணியாளர்கள் 17 நபர்கள் படுகொலை செய்யப்பட்டு நேற்றுடன் (04) 19 வருடங்கள் கடக்கின்றன.

இதனை நினைவுபடுத்தும் முகமாக நினைவு தினம் திருகோணமலையில் இடம்பெற்றது.

இதன்போது மெழுகுவர்த்தி ஏற்றப்பட்டு உணர்வுபூர்வமாக நினைவஞ்சலி செலுத்தப்பட்டது.

இங்கு கருத்து தெரிவித்த ராவண சேனா அமைப்பின் தலைவர் கு.செந்தூரன், இலங்கை இராணுவத்தால் படுகொலை செய்யப்பட்ட 17 தன்னார்வ ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டார்கள் இவர்களுக்கான நீதி கிடைக்க வேண்டும் நீதி இன்றி ஏமாற்றப்பட்டு 19 வருடங்களை கடந்துள்ளன.

ஏமாற்றபடுப் பட்டியலில் தான் தமிழர்கள் இருந்து கொண்டிருக்கிறோம் என்றார். பிரான்ஸ் நாட்டை தலைமையக கொண்டு இயங்கிய குறித்த தன்னார்வ நிறுவனமான யுஊகு பணியாற்றிய 17 ஊழியர்கள் படுகொலை செய்யப்பட்டனர். 2006ஆம் ஆண்டு நிலவிய யுத்த சூழ்நிலை காரணமாக இவர்கள் படுகொலை செய யப்பட்டனர். (ஐ)

## சோமரத்ன ராஜபக்ஷவின் உயிருக்கு ஆபத்து ஏற்படுமானால் அரசாங்கமே முழுப் பொறுப்பேற்க வேண்டும்- கஜேந்திரகுமார் எம்.பி!

கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷவின் உயிருக்கு சிறையில் ஆபத்து ஏற்படுமானால் அரசாங்கமே முழுப் பொறுப்பேற்க வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் கஜேந்திரகுமார் எம்.பி தெரிவிக்கையில்,

யாழ். செம்மணி மனிதப் புதைகுழி விவகாரம் தொடர்பில் சர்வதேச விசாரணையொன்று முன்னெடுக்கப்படும் பட்சத்தில், அதில் சாட்சியமளிப்பதற்குத் தயாராக இருப்பதாக கிருஷாந்தி குமாரசுவாமி படுகொலை வழக்கில் பிரதான குற்றவாளியாக நீதிமன்றத்தில் தீர்ப்பளிக்கப்பட்ட சோமரத்ன ராஜபக்ஷ தெரிவித்துள்ளதாக குறிப்பிட்டு அவரது மனைவி எஸ்.சி.விஜேவிக்ரம ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவுக்குக் கடிதமொன்றை அனுப்பிவைத்துள்ளார் என்ற செய்தியை ஊடகங்களில் பார்த்தேன். தமிழ் மக்களின் மனங்களில் அழியா இடம் பிடித்திருக்கின்ற செம்மணி மனிதபுதைகுழி வழக்கில் ஏற்கனவே குற்றவாளியாக சோமரத்ன ராஜபக்ஷ சிறைத்தண்டனை அனுபவித்து வருகிறார்.

ஏற்கனவே அவர் செம்மணி பகுதியில் சுமார் அறுநூறு உடல்கள்வரை புதைக்கப்பட்டுள்ளதாக வாக்குமூலம் ஒன்று காணப்படுகிறது.

எம்மை பொறுத்தவரையில் சோமரத்ன ராஜபக்ஷ ஒரு குற்றவாளி. குற்றவாளி சில விடயங்களை கூறப்போவதாக அவரது மனைவி கூறுகிறார்.

ஆகவே அவர் என்ன கூற போகிறார் என்பதை அறிய வேண்டும். அவர் சிறையில் உள்ள நிலையில் அவருக்கு ஏதாவது உயிர் ஆபத்துக்கள் ஏற்படுமானால் அதற்கு அரசாங்கமே பொறுப்பேற்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார்.

## "ஹரக் கட்டா" உட்பட ஐந்து குற்றவாளிகளுக்கு எதிராக புதிய வழக்கு தாக்கல்!

நதுன் சிந்தக விக்ரமரத்ன எனப்படும் "ஹரக் கட்டா" உட்பட ஐந்து குற்றவாளிகளுக்கு எதிராக, சட்டமா அதிபர் கொழும்பு மேல் நீதிமன்றத்தில் புதிய வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் கைது செய்யப்பட்டு காவலில் இருந்த போது தப்பிக்க சதி செய்தமை உள்ளிட்ட 50 குற்றசாட்டுகளை முன்வைத்து, கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஷங்க முன்னிலையில் இந்த குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறித்த வழக்கில் பிரதிவாதிகளாக நதுன் சிந்தக விக்ரமரத்ன (எ) ஹரக் கட்டா, குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் கான்ஸ்டபிள் ரவிந்து சந்திப குணசேகர, தினேஷ் தரங்க, ருவான் சாமர (எ) மிதிகம ருவன் மற்றும் சஞ்சீவ அபேசிங்க ஆகியோர் பெயரிடப்பட்டுள்ளனர்

இந்த வழக்கு இன்று (05) கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி சுஜீவ நிஸ்ஸங்க முன்னிலையில் விசாரணைக்கு வந்தபோது, பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர். குற்றப்பத்திரிகை ஒப்படைக்கப்பட்ட பின்னர், பிரதிவாதிகளின் கைரேகைகளைப் பதிவு செய்து அறிக்கை சமர்ப்பிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

அதன்படி "ஹரக்கட்டா"வின் தடுப்புக்காவல் உத்தரவு காலாவதியான பின்னர், அவரை விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார். ஏனைய நான்கு பிரதிவாதிகளையும் விளக்கமறியலில் வைக்க நீதிபதி உத்தரவிட்டார்.

பின்னர் வழக்கை செப்டம்பர் 24ஆம் திகதி மீண்டும் விசாரிக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

## பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து தேசபந்து தென்னகோனை நீக்கும் பிரேரணை– நாடாளுமன்றில் இன்று விவாதம்!

*தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் பிரேரணை இன்று (05) நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்பட உள்ளது. நாடாளுமன்ற நடவடிக்கைகள் இன்று ஆரம்பித்துள்ள நிலையில், தேசபந்து தென்னகோனை பொலிஸ்மா அதிபர்பதவியில் இருந்து நீக்கும் பிரேரணை தொடர்பான விவாதம் காலை 11.30 முதல் மாலை 4 மணி வரை நடைபெறும் என்று நாடாளுமன்ற செயலகம்தெரிவித்துள்ளது. அத்துடன் இந்தப் பிரேரணை மீதான வாக்கெடுப்பு மாலை 4 மணிக்கு நடைபெறும் என்று நாடாளுமன்றச் செயலகம் தெரிவித்துள்ளது.*

*ஆளும்கட்சி உறுப்பினர்கள் அனைவரையும் இந்த வாக்கெடுப்பில் பங்கேற்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக நாடாளுமன்றச் செயலகம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினர்களில் 113 உறுப்பினர்கள் வாக்களித்தால் இந்தப் பிரேரணையை நிறைவேற்ற முடியும்.*

*சபாநாயகர் பிரேரணை நிறைவேற்றப்பட்டதாக அறிவித்த பின்னர், பொலிஸ்மா அதிபர் பதவிக்கான பெயரை அரசியலமைப்புச் சபைக்கு ஜனாதிபதி பரிந்துரைக்க உள்ளார்.*

*மேலும், இலங்கை மின்சாரத் திருத்தச் சட்டமூலத்தின் இரண்டாவது வாசிப்பு மீதான விவாதம் நாளை (06) நடைபெற உள்ளதுடன், புகையிலை வரிச் சட்டத்தின் கீழ் உள்ள விதிமுறைகள் குறித்தும் விவாதிக்கப்பட உள்ளதாக நாடாளுமன்றச் செயலகம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

## 66 இலட்சம் ரூபா பெறுமதியான நகைகளுடன் இளைஞர் கைது

வவுனியா,, ஓக 05

வவுனியாவில் இடம்பெற்ற திருட்டுச் சம்பவம் தொடர்பாக 33 வயது இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சோயா வீதியில் உள்ள வீடு ஒன்றில் ஒரு வாரத்திற்கு முன்னர் திருட்டுச் சம்பவம் நடைபெற்றது.

இது தொடர்பாக வீட்டில் வசிப்பவர்கள் வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையத்தின் குற்றத்தடுப்புப் பிரிவில் முறைப்பாடு செய்தனர்.

முறைப்பாட்டிற்கு அமைய, வவுனியா தலைமைப் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஜயக்கொடியின் வழிகாட்டலில், குற்றத்தடுப்புப் பிரிவைச் சேர்ந்த உப பொலிஸ் பரிசோதகர் சமரவீர, பொலிஸ் சார்ஜன்ட்களான திசாநாயக்க, திலீப், ஜெயதுங்க, உபாலி, உடுவெல்ல ஆகியோர் விசாரணைகளை மேற்கொண்டனர்.

இதன்போது, வவுனியா, ஓமந்தை, புதியவேலர் சின்னக்குளம் பகுதியைச்சேர்ந்த 33 வயது இளைஞர் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

அவரிடம் நடத்தப்பட்ட விசாரணைகளில், தாலிக்கொடி, சங்கிலி, காப்பு, மோதிரம் உள்ளிட்ட 25.5 பவுண் தங்க நகைகள், 66 இலட்சத்து 33 ஆயிரத்து 800 ரூபா பெறுமதியுடைய தங்க நகைகள் மீட்கப்பட்டன.

கைது செய்யப்பட்ட இளைஞரை மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

## இணைய சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 இந்தியர்கள் இலங்கையில் கைது!

இணைய சூதாட்டத்தில் ஈடுபட்ட 11 இந்தியர்கள் தலங்கம, அக்குரேகொட பகுதியில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலையடுத்து நேற்று இரவு மேற்கொள்ளப்பட்ட சுற்றிவழிப்பின் போதே குறித்த கைது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது இணைய சூதாட்டத்தில் ஈடுபட்டிருந்த 8 ஆண்கள் மற்றும் 3 பெண்கள் உட்பட 11 இந்தியர்கள் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட பெண் சந்தேக நபர்கள் 22, 30 மற்றும் 43 வயதுடையவர்கள் எனவும், ஆண் சந்தேக நபர்கள் 25, 26, 27 மற்றும் 29 வயதுடையவர்கள் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கைதுசெய்யப்பட்ட நபர்களிடம் இருந்து 20 கைபேசிகள், 3 மடிக்கணினிகள் மற்றும் ஒரு டேப்லெட் என்பன கைப்பற்றப்பட்டன.

சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை தலங்கம பொலிஸார் முன்னெடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம்!

*சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் சிலருக்கு இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் உதவி பொலிஸ் அத்தியட்சகர் உதயகுமார வுட்லர் தெரிவித்துள்ளார்.*

*தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் அனுமதியுடன், சேவைத் தேவைகளின் அடிப்படையில் பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரியவினால் இந்த இடமாற்றம் வழங்கப்பட்டுள்ளது.*

*அதன்படி சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் மற்றும் உதவி பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளிட்ட பலருக்கு இடமாற்றங்கள் வழங்கப்பட்டுள்ளன.*



## ஜம்மு-காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் உடல்நலக் குறைவால் காலமானார்

ஜம்மு-காஷ்மீர் முன்னாள் ஆளுநர் சத்யபால் மாலிக் (79) உடல்நலக் குறைவால் டெல்லியில் காலமானார். உத்தரப் பிரதேச மாநிலத்தை சேர்ந்தவர் சத்யபால் மாலிக். இவர் பாரதிய கிராந்தி தள், ஜனதா தள், இந்திய தேசிய காங்கிரஸ், லோக் தள், சமாஜ்வாதி கட்சி ஆகியவற்றில் இணைந்து மக்கள் பணியாற்றி யிருக்கிறார். ஜம்மு-காஷ்மீரில் 370-வது சட்டப்பிரிவு ரத்து செய்யப்பட்டபோது சத்யபால் மாலிக் ஆளுநராக இருந்தவர்.

உத்தரப்பிரதேசத்தில் இருந்து 2 முறை மாநிலங்களவைக்கு சத்யபால் மாலிக் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஒடிசா, பீகார், கோவா, மேகாலயா உள்ளிட்ட மாநிலங்களிலும் ஆளுநராக சத்யபால் மாலிக் பணியாற்றியுள்ளார். உத்தரப்பிர தேசத்தில் இருந்து ஒருமுறை மக்களவைக்கும் தேர்வாகி சத்யபால் மாலிக் எம்.பி.யாக இருந்தார். இவர் நீண்ட நாட்களாக உடல்நலக்குறைவால் பாதிக்கப்பட்டு வந்த நிலையில் இன்றைய தினம் டெல்லி ராம் மனோகர் லோகியா மருத்துவமனையில் நண்பகல் 1 மணியளவில் சத்யபால் மாலிக் உயிரிழந்தார். (ஐ)

# 17,000 கோடி கடன் மோசடி வழக்கு: அமலாக்கத்துறை விசாரணைக்கு தொழிலதிபர் அனில் அம்பானி ஆஜர்!



17,000 கோடி கடன் மோசடி வழக்கில் அமலாக்கத்துறை விசாரணைக்கு தொழிலதிபர் அனில் அம்பானி ஆஜரானார். அனில் அம்பானி குழுமத்தின் பல நிறுவனங்கள் ரூ.10,000 கோடிக்கும் அதிகமான நிதி முறைகேடுகளில் ஈடுபட்டதாக கூறப்படுகிறது. மேலும், லஞ்சம், பிணையற்ற கடன் குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில், யெஸ் வங்கியில் வாங்கிய ரூ.3,000 கோடி கடனை தொழிலதிபர் அனில் அம்பானி சட்டவிரோதமாக மடைமாற்றம் செய்து மோசடியில் ஈடுபட்டதாக வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிலையில், வருகின்ற ஆகஸ்ட் 5ம் தேதி டெல்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் விசாரணைக்கு நேரில் ஆஜராகுமாறு அனில் அம்பானிக்கு அமலாக்கத்துறை தரப்பில் சம்மன் அனுப்பி வைக்கப்பட்டு இருந்தது. அனில் அம்பானி குழுமத்தின் மீதான மோசடி புகார்கள் குறித்து அமலாக்கத்துறை அதிகாரிகள் அனில் அம்பானியிடம் வாக்குமூலம் பெறவுள்ளனர். இந்நிலையில், டெல்லியில் உள்ள அமலாக்கத்துறை அலுவலகத்தில் தொழிலதிபர் அனில் அம்பானி விசாரணைக்கு ஆஜரானார். அமலாக்கத்துறை அதிகாரிகள் அவரிடம் விசாரணை நடத்தி வருகின்றனர்.

முன்னதாக, யெஸ் வங்கியிடமிருந்து கடன் பெற்று ரூ.3,000 கோடி அளவுக்கு மோசடியில் ஈடுபட்டதாகக் கூறப்படும் நிலையில், பண மோசடி வழக்கில் அனில் அம்பானியின் ரிலையன்ஸ் குழுமத்துடன் தொடர்புடைய 35 வளாகங்கள், 50 நிறுவனங்கள், 25 தனிநபர்களுக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத் துறை கடந்த மாதம் சோதனை நடத்தியது. கடன்பெற்று திரும்ப செலுத்தாததால், மோசடியாளர் என அனில் அம்பானியையும், மோசடி கடன் என ரிலையன்ஸ் குழுமத்துக்கு அளித்த கடனையும் அடையாளப்படுத்தி, பாரத ஸ்டேட் வங்கி அறிவித்திருந்த நிலையில், தொழிலதிபர் அனில் அம்பானிக்குச் சொந்தமான இடங்களில் அமலாக்கத்துறை சோதனையை நடத்தியது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# ரூ.28 கோடியில் கிளாம்பாக்கம் காவல் நிலையம் கட்டடத்தை திறந்து வைத்தார் மு.க.ஸ்டாலின்

ரூ.28 கோடி செலவில் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையம், பெரம்பூர்-சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடத்தை முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் இன்று கொளத்தூரில் நடைபெற்ற நிகழ்ச்சியில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில் 18.26 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் பெரம்பூர், மார்க்கெட் தெருவிலுள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 9.74 கோடி ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்து, சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் 17.65 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டினார்.

செங்கல்பட்டு மாவட்டம், கிளாம்பாக்கம் கலைஞர் நூற்றாண்டு பேருந்து முனையத்தில், சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 18.26 கோடி ரூபாய் செலவில் 30,000 சதுர அடி கட்டிட பரப்பளவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கிளாம்பாக்கம் காவல் நிலையத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்தார்.

இக்காவல் நிலையக் கட்டடம், காவல் உதவி ஆணையர் மற்றும் ஆய்வாளர்கள் அறை, கட்டுபாட்டு அறை, கண்காணிப்பு அறை, கைதிகள் அறை, உணவருந்தும் அறை, ஆடவர் மற்றும் மகளிர் ஓய்வு அறை, பொது மக்கள் கலந்தாய்வு கூடம், காத்திருப்புக் கூடம், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகனங்கள் நிறுத்துமிடம் போன்ற பல்வேறு வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளது.

இப்பேருந்து முனையத்தில் தினசரி 2500 பேருந்துகள் இயக்கப்பட்டு, சாதாரண நாட்களில் 50,000 பயணிகளும், விடுமுறை மற்றும் பண்டிகை நாட்களில் சுமார் 2 லட்சம் பயணிகளும் பயன்படுத்துகின்றனர். பயணிகள் மற்றும் பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் இக்காவல் நிலையம் அமைக்கப்பட்டுள்ளது.

சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் கூடுதல் பள்ளிக் கட்டடம்

பெரம்பூர், மார்க்கெட் தெருவில் உள்ள சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் சிங்கார சென்னை 2.0 மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ், 9.74 கோடி ரூபாய் செலவில் 24,000 சதுர அடி பரப்பளவில் தரை மற்றும் மூன்று தளங்களுடன் கட்டப்பட்டுள்ள கூடுதல் பள்ளிக் கட்டடத்தை முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்து, வகுப்பறைகள், ஆய்வுக்கூடம், கழிப்பறைகள் போன்றவற்றை பார்வையிட்டார். மேலும், வகுப்பறைக்கு நேரில் சென்று மாணவியர்களுடன் கலந்துரையாடினார்.

இக்கூடுதல் பள்ளிக் கட்டடத்தின் தரைத்தளத்தில் 3 வகுப்பறைகள், ஆய்வகம், தலைமையாசிரியர், ஆசிரியர்கள் மற்றும் அலுவலக அறைகள், முதல் மற்றும் இரண்டாம் தளத்தில் தலா 6 வகுப்பறைகள் மற்றும் ஆய்வக அறை, மூன்றாம் தளத்தில் 3 வகுப்பறைகள், கலையரங்கம் ஆகியவற்றுடன் கூடிய இணைப்புக் கட்டடம் ஆகியவை கட்டப்பட்டுள்ளது.

அடிக்கல் நாட்டப்பட்ட பணிகளின் விவரங்கள்

சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் சார்பில் கொளத்தூரில் 11.37 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 29,514 சதுர அடி கட்டட பரப்பளவில் தரை மற்றும் நான்கு தளங்களுடன் கட்டப்படவுள்ள புதிய காவல் துணை ஆணையர் அலுவலகம், பெரவள்ளூர் காவல் நிலையம், சட்டம் ஒழுங்கு பிரிவு, போக்குவரத்து காவல் பிரிவு, சைபர் குற்றப்பிரிவுக் கட்டடம் கொளத்தூர், ரெட்டேரியில் சென்னை பெருநகர் வளர்ச்சிக் குழுமம் சார்பில் 1.62 கோடி ரூபாய் மதிப்பீட்டில் நவீன கழிப்பிட வசதிகளுடன் கூடிய குளிரூட்டப்பட்ட பேருந்து நிறுத்தம்

பெருநகர சென்னை மாநகராட்சி சார்பில் கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் 3.27 கோடி ரூபாய் மதிப்பீட்டில் 6-வது மண்டலம், 70-வது வார்டு, பில்கிங்டன் சாலையில் அமைந்துள்ள இரயில்வே ஆன்ஸ்லே வாய்க்கால் இருபுறமும் தடுப்புச்சுவர் அமைக்கும் பணிகள் மற்றும் மண்டலம்-6ல், 1 கோடியே 39 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் 69வது வார்டு, ரங்கசாமி தெரு மற்றும் லோகோ ஸ்கீம் 1-வது பிரதான சாலையில் அமைந்துள்ள விளையாட்டு மைதானங்கள் மற்றும் வார்டு-64, 65, 67, 69 ஆகியவற்றில் உள்ள ஒன்பது பூங்காக்களை மேம்படுத்தும் பணிகள் என மொத்தம் 17 கோடியே 65 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலான 14 புதிய திட்டப் பணிகளுக்கு முதலமைச்சர் அவர்கள் அடிக்கல் நாட்டினார்.

கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்குதல் கொளத்தூர் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில், கொளத்தூரில் தனியார் உடற்பயிற்சிக் கூடத்தில் தீ விபத்து ஏற்பட்டதில் சேதமடைந்த இருசக்கர வாகனங்களுக்கு மாற்றாக பாதிக்கப்பட்ட மூன்று நபர்களுக்கு புதிய இருசக்கர வாகனங்களை முதலமைச்சர் அவர்கள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர்.பிரியா, சட்டமன்ற உறுப்பினர்கள் தாயகம் கவி, வெற்றியழகன், ஜோசப் சாமுவேல், துணை மேயர் மு.மகேஷ்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், இ.கா.ப., வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் காகர்லா உஷா, இ.ஆ.ப., தாம்பரம் மாநகர காவல் ஆணையர் அபின் தினேஷ் மோதக், இ.கா.ப.,

சென்னை மாநகர காவல் ஆணையர் ஆ.அருண், இ.கா.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் உறுப்பினர் செயலர்ஃ முதன்மைச் செயலாளர் கோ.பிரகாஷ், இ.ஆ.ப., பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், இ.ஆ.ப., சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் முதன்மை செயல் அலுவலர் அ.சிவஞானம், இ.ஆ.ப., நகர் ஊரமைப்பு இயக்குநர் பா.கணேசன், இ.ஆ.ப., தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனத்தின் தலைவர் ப.ரங்கநாதன், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர். (ஐ)

# டோங்கிரியா வன தேவதைகள்!



சித்ரா



2010 ஆம் ஆண்டு சிறந்த படத்துக்கான அகாடமி விருதுக்குப் பரிந்துரைக்கப்பட்ட 'அவதார்' திரைப்படத்தில் சொல்லப்பட்ட நாவிகளின் போராட்டக் கதை ஒரு கற்பனை கதையல்ல, அது நிஜம் என்கிறது டைம்ஸ் நாளிதழ்.

கிழக்கு இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள நியாம்கிரி மலைத்தொடரைத் தாயகமாகக் கொண்டுள்ள டோங்ரியா கோந்த் பழங்குடி வீர மங்கைகளின் நிஜ போராட்ட கதை.

இந்தியாவின் ஒடிசா மாநிலத்தில் உள்ள நியாம்கிரி மலைப் பகுதியைச் சேர்ந்த டோங்ரியா கோந்த் என்று அழைக்கப்படும் பழங்குடி, பல்லாயிரம் ஆண்டுகளாக வற்றாத நீரோடைகள், அடர்ந்த காடுகள் நிறைந்த மலைகள், ஆழமான பள்ளத்தாக்குகள் மற்றும் பெரிய பலா மரங்களுடன் வாழ்ந்து வருகின்றனர். தங்களை 'நீரோடைகளின் பாதுகாவலர்கள்' என்று அழைத்துக் கொள்கிறார்கள் இவர்கள்.



ஒடிசாவின் 62 பழங்குடியினரில் டோங்ரியா கோந்த் எண்ணிக்கையில் மிகப்பெரியது. திராவிடப் பேச்சுவழக்கு எனக் கருதப்படும் கூவி என்கிற தனி மொழிக்காக இவர்கள் அறியப்படுகிறார்கள். அவர்கள் கொண்டாடும் மெரியா திருவிழா புகழ்பெற்றது.

தனித்துவமான நகைகள், பச்சைக் குத்தல்கள் மற்றும்சிகை அலங்காரங்களின்மூலம்டோங்கிரியா பெண்கள் தங்களை அலங்கரிக்கின்றனர். பெண்கள் காதுகளில் அதிகமான வளையங்கள் அணிகின்றனர். பெண்கள் மூக்கில் மூன்று வளையங்களை அணிகின்றனர். டோங்ரியா பெண்கள் தங்கள் தலைமுடியில் கிளிப்புகள் மற்றும் கழுத்தில் பெரிய வளையங்கள், மணிகளை அணிகிறார்கள்.

அவர்கள் இப்பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பற்றிய நெருக்கமான அறிவைக் கொண்ட இயற்கை ஆர்வலர்கள். அவர்களின் கலாசாரம், வாழ்க்கை முறை மற்றும் இயற்கையின் மீதான அவர்களின் அன்பு ஆகியவை டோங்ரியா கோந்த் பெண்கள் நெய்யும் சால்வைகளில் பிரதிபலிக்கின்றன. பொதுவாக பச்சை, சிவப்பு, மஞ்சள், பழுப்பு நிற நூல்கள் சால்வைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பச்சை நிறமானது பல்லுயிரியலைக் குறிக்கிறது, சிவப்பு அவர்களின் மத நம்பிக்கையையும், மஞ்சள் அமைதியையும், பழுப்பு டோங்கிரியாக்களுக்கு மிக முக்கியமான தெய்வமான தரணி பேனுவையும் குறிக்கிறது.

டோங்ரியா கோந்த் பழங்குடி மலைகளின் வளமான சரிவுகளில் விவசாயம் செய்து, அவற்றின் விளைச்சலை அறுவடை செய்கிறார்கள். நியம்கிரி மலையின் சரிவுகளைப் பயிரிடுவதற்கான உரிமையை நியம் ராஜா அவர்களுக்கு வழங்கியுள்ளார் என்றும், தாங்கள் அவருடைய அரசப் பரம்பரையினர் என்றும் அவர்கள் நம்புகிறார்கள். அவர்கள் தங்கள் காடுகள், அவர்கள் வைத்திருக்கும் தாவரங்கள், வனவிலங்குகள் பற்றிய அறிவைக்கொண்டுள்ளனர். காடுகளில் இருந்து காட்டு மா, அன்னாசி, பலா, தேன் போன்ற காட்டு உணவுகளைச் சேகரிக்கின்றனர். நியம்கிரி மலையில் அரிய மருத்துவ மூலிகைகளும் ஏராளமாகக் காணப்படுகின்றன. கீல்வாதம், வயிற்றுப்போக்கு, எலும்பு முறிவுகள், மலேரியா, பாம்புக் கடி உள்ளிட்ட பல்வேறு நோய்களுக்குச் சிகிச்சையளிக்க அந்த மூலிகைகள் பயன்படுகிறது. ஒரேஞ்ச், வாழை, இஞ்சி, பப்பாளி, நறுமண பிசின் போன்ற பயிர்களை உற்பத்தி செய்து உள்ளூர் சந்தைகளில் விற்கப்படுகின்றன. டோங்ரியாக்கள் தங்கள் காடுகளில் இருந்து கிட்டத்தட்ட 200 வகையான உணவுகளைச் சேகரித்து நூற்றுக்கும் மேற்பட்ட பயிர்களைத் தங்கள் வயல்களில் அறுவடை செய்கின்றனர்.

இந்த அற்புதமான பன்முகத்தன்மை அவர்களை ஆண்டு முழுவதும் பராமரிக்கிறது. அவர்களின் மலைகளுக்கு அப்பாலிருந்து உணவு அல்லது பொருட்கள் அவர்களுக்கு தேவைப்பட்டதில்லை. பழங்குடியினர் கோழி, பன்றிகள், ஆடுகள், எருமைகளையும் வளர்த்து வருகின்றனர். டோங்ரியா ஆண்கள் காடுகளின் ராட்சதப் பனை மரங்களிலிருந்து சாறு சேகரிக்கிறார்கள், இந்தப் பனை சாறு நியம்கிரி மலைகள் முழுவதும் அவர்கள் செய்யும் நீண்ட நடைப்பயணங்களுக்கு உடல் வலிமை வழங்குகிறது. கிராமங்களிலும் மலை உச்சிகளிலும் அறுவடைக்குப் பிறகும், புத்தாண்டு பயிர்

அவர்கள் இப்பகுதியின் தாவரங்கள் மற்றும் விலங்கினங்களைப் பற்றிய நெருக்கமான அறிவைக் கொண்ட இயற்கை ஆர்வலர்கள். அவர்களின் கலாசாரம், வாழ்க்கை முறை மற்றும் இயற்கையின் மீதான அவர்களின் அன்பு ஆகியவை டோங்ரியா கோந்த் பெண்கள் நெய்யும் சால்வைகளில் பிரதிபலிக்கின்றன. பொதுவாக பச்சை, சிவப்பு, மஞ்சள், பழுப்பு நிற நூல்கள் சால்வைகளில் பயன்படுத்தப்படுகின்றன. பச்சை நிறமானது பல்லுயிரியலைக் குறிக்கிறது, சிவப்பு அவர்களின் மத நம்பிக்கையையும், மஞ்சள் அமைதியையும், பழுப்பு டோங்கிரியாக்களுக்கு மிக முக்கியமான தெய்வமான தரணி பேனுவையும் குறிக்கிறது.

நடுவதற்கு முன்பும் பாரம்பரியமாக விலங்குகள் பலி கொடுக்கப்படுகின்றன. ஒவ்வொரு கிராமத்திலும் உள்ளூர்க் கடவுள்களை வணங்குவதற்கான புனித இடங்கள் உள்ளன. கோழிகள், ஆடுகள், பன்றிகள், எருமைகள் பலியிடப்படுகின்றன. டோங்ரியா கோந்த் மக்களுக்கு அரசியல், மதத் தலைவர்கள் இல்லை குலங்கள், கிராமங்கள் தங்கள் சொந்த தலைவர்கள் மற்றும் குறிப்பிட்ட சடங்கு செயற்பாடுகளுடன் தனிநபர்களைக் கொண்டுள்ளனர். ஆண்கள், பெண்கள் பூசாரிகளாக இருக்கின்றனர்.

நியாம்கிரி மலைகள் பருவமழையில் நனைந்து, வம்சதாரா ஆறு உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட வற்றாத நீரோடைகள் ஆறுகளாக உருவாகின்றன. இந்த நீரோடைகள் மலைகளில் வாழும் சமூகங்களுக்கும் சமவெளிகளில் உள்ளவர்களுக்கும் முக்கியமான குடிநீர், பாசன நீரையும் வழங்குகின்றன. வம்சதாரா ஆறு ஒடிசா, ஆந்திரா மாநிலங்களில் உள்ள ஆயிரக் கணக்கான மக்களுக்கு குடிநீர், பாசன நீர் வழங்குகிறது. பல நூற்றாண்டுகளாக புலிகள், சிறுத்தைகள், ராட்சத அணில்கள், சோம்பல் கரடிகள் சுற்றித் திரியும் காடுகளின் வளமான பல்லுயிரியலைப் பராமரிக்க டோங்ரியா மக்கள் உதவியுள்ளனர். டோங்ரியாக்கள் தங்கள் கடவுள்கள், மலைகள் மற்றும் நீரோடைகள் மீது வைத்திருக்கும் ஆழ்ந்த மரியாதை அவர்களின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சத்திலும் பிரதிபலிக்கிறது. அவர்களின் கலை வடிவங்கள் கூட மலைகளைப் பிரதிபலிக்கின்றன, கிராமத்தின் கோயில்களில் காணப்படும் முக்கோண வடிவங்களில் கிராமம், பண்ணை, காடுகள் ஒத்திருக்கின்றன.

அவர்களின் இப்படிப்பட்ட

(7ஆம் பக்கம் பார்க்க...)



# அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணியப்போவதில்லை ஈரான், ரஷ்யா எண்ணெய் இறக்குமதி தொடரும்



அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணியப்போவதில்லை என்று அறிவித்துள்ள சீனா, ஈரான் மற்றும் ரஷ்யா எண்ணெய் இறக்குமதியை தொடர்கிறது. இதனால் அமெரிக்க, சீன வர்த்தக பேச்சுவார்த்தையில் முட்டுக்கட்டை ஏற்பட்டுள்ளது. அமெரிக்க அதிபராக 2வது முறையாக பதவியேற்ற பிறகு, சீனா உட்பட பல்வேறு நாடுகள் மீது புதிய வரி விதிப்புகளை அறிவித்தார். சீனா மீது 34ழூ வரியை விதித்தார். இதற்கு பதிலடியாக அமெரிக்கா மீது சீனாவை வரியை விதித்தது. கடந்த ஜீன் மாதம் சீன அதிபர் ஜி ஜின்பிங்-கும் அமெரிக்க அதிபர் டிரம்பும் தொலைபேசி வாயிலாக பேச்சுவார்த்தை நடத்தியதில், எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. இந்த வரி போர் தற்போது உச்சகட்டத்தை அடைந துள்ளது.

இதற்கிடையே ஈரான், ரஷ்யாவில் இருந்து எண்ணெய் வாங்குவதை சீனா நிறுத்த வேண்டும் என்று அமெரிக்கா கோரியது. ஆனால் அமெரிக்காவின் மிரட்டலுக்கு பணியப்போவதில்லை என்று அறிவித்துள்ள சீனா, ஈரான், ரஷ்யா எண்ணெய் இறக்குமதியை தொடர்வதாக அறிவித்துள்ளது. தனது தேசிய நலன்களுக்கு முன்னுரிமை அளிக்கும் வகையில், எரிசக்தி விநியோகத்தை உறுதி செய்யும் என்று சீனா தெரிவித்துள்ளது. சுவீடன் தலைநகர் ஸ்டாக்ஹோமில் 2 நாட்கள் வர்த்தக பேச்சுவார்த்தைகளுக்கு பின் சீனா மீது 100ழூ வரி விதிக்கப்படும் என அமெரிக்கா அறிவித்தது.

இந்த அறிவிப்பிற்கு பதிலடி தரும் வகையில், ஈரான் மற்றும் ரஷ்ய எண்ணெய் இறக்குமதி குறித்த அறிவிப்பை சீனா வெளியிட்டுள்ளது. (ஐ)

## மாஜி பிரதமர் இம்ரான் கைது செய்யப்பட்டு 2 ஆண்டு நிறைவு: பாகிஸ்தான் முழுவதும் இன்று போராட்டம்




பாகிஸ்தான் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு ஊழல் வழக்கில் தண்டனை விதிக்கப்பட்டது. இதனையடுத்து கடந்த 2023ம் ஆண்டு ஆகஸ்ட் 5ம் தேதி லாகூரில் உள்ள அவரது வீட்டில் இருந்து இம்ரான் கைது செய்யப்பட்டார். தொடர்ந்து அடுத்தடுத்த வழக்குகளில் தண்டனை பெற்றதால் அவர் சிறையில் அடைக்கப்பட்டார். இன்று இம்ரான் கைது செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் நிறைவடைகின்றது.

இதனை தொடர்ந்து இம்ரானின் அறிவுறுத்தலின்பேரில் நாடு முழுவதும் பாகிஸ்தான் தெஹ்ரிக் இ இன்சாப் கட்சி போராட்டங்களை நடத்துவதற்கு திட்டமிட்டு உள்ளது. இதனை தொடர்ந்து முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக நேற்று பாகிஸ்தான் தெஹ்ரிக் கட்சியை சேர்ந்த தொண்டர்களை போலீசார் கைது செய்யத் தொடங்கினார்கள். லாகூரில் சுமார் 150 பேர் தடுப்பு காவலில் வைக்கப்பட்டனர். (ஐ)




## சவுதி அரேபியாவில் நேற்று ஒரே நாளில் 8 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம்

சவுதி அரேபியாவில் நேற்று ஒரே நாளில் 8 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டுகளுக்கு வளைகுடா நாடுகளில் மரண தண்டனை அளிக்கப்படுவது வழக்கம். கடந்த 2019 ஆம் ஆண்டு போதை பொருள் குற்றங்களுக்கான மரண தண்டனையை சவூதி அரசு நிறுத்தி வைத்திருந்தது. பின்னர், மீண்டும் 2022ம் ஆண்டு இறுதியில் போதைப்பொருள் குற்றங்களுக்கு மரணதண்டனையை அமல்படுத்தியது.

2022ம் ஆண்டு 19 பேரும், 2023ம் ஆண்டு 2 பேரும், 2024ம் ஆண்டு 117 பேரும் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். கடந்த 2024ம் ஆண்டு 338 மரணதண்டனைகள் நிறைவேற்றப்பட்டன. 2025ம் ஆண்டு தொடக்கத்திலிருந்து சவுதி அரேபியாவில் இதுவரை 230 பேருக்கு மரணதண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது.

அதில் 154 பேர் போதைப்பொருள் தொடர்பான குற்றங்களுக்காக தூக்கிலிடப்பட்டுள்ளனர். அந்த வகையில் சவுதி அரேபியாவில் நேற்று ஒரே நாளில் 8 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றம் செய்யப்பட்டது. கஞ்சா, போதை பொருள் கடத்திய குற்றத்திற்காக நஜ்ரானில் 4 சோமாலியர்கள், 3 எத்தியோப்பியர்கள், தாயை கொலை செய்த குற்றத்திற்காக சவுதி குடிமகன் ஒருவர் உட்பட 8 பேருக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டது. (ஐ)

## இந்தியாவுக்கு மேலும் வரியை உயர்த்தப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவிப்பு



இந்தியாவுக்கு மேலும் வரியை உயர்த்தப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். ரஷ்யாவிடம் இருந்து அதிக அளவு எண்ணெய்ப் பொருட்கள் மற்றும் ராணுவ உபகரணங்கள் வாங்குவதால், இந்தியப் பொருட்களுக்கு 25 சதவீத வரி விதித்து அமெரிக்க அதிபர் டிரம்ப் உத்தரவிட்டுள்ளார். இந்தப்புதிய வரிவரும் 7-ம் தேதி முதல் அமலுக்கு வரவுள்ளது. ரஷ்யாவிடம் இருந்து எண்ணெய் கொள்முதல் செய்வதை இந்தியா தொடர்ந்தால், மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படும் என வெள்ளை மாளிகை அச்சுறுத்தல் விடுத்துள்ளது.

இந்தியாவுக்கு மேலும் வரியை உயர்த்தப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். ஏற்கனவே 25% வரி விதித்துள்ள நிலையில் வரியை மேலும் உயர்த்தப் போவதாக அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளதால் அதிர்ச்சி அடைந்துள்ளனர். ரஷ்யாவிடம் அதிகளவில் கச்சா எண்ணெய் வாங்குவதுடன் அதை சந்தையில் விற்று இந்தியா லாபம் ஈட்டுகிறது. ரஷ்ய தாக்குதலில் உக்ரேனியர்கள் உயிரிழப்பதை கண்டு இந்தியாவுக்கு கவலை இல்லை. அதனாலதான் இந்தியாவுக்கு மேலும் கூடுதல் வரியை விதிக்கவுள்ளேன் என்று கூறினார். (ஐ)

## தனக்குத்தானே கல்லறை தோண்டும் இஸ்ரேல் பிணைக்கைதி





ஹமாஸ் அமைப்பால் பிடித்து வைக்கப்பட்ட இஸ்ரேல் பிணைக்கைதி ஒருவர், பட்டினியால் எலும்பும்தோலுமாகக்காட்சியளித்து தனக்குத்தானே கல்லறை தோண்டும் கொடூரக் காணொளி வெளியாகி உள்ளது. கடந்த 2023, அக்டோபர் 7ம் தேதி இஸ்ரேலில் ஹமாஸ் நடத்திய தாக்குதலில், பொதுமக்கள் உட்பட 1,219 பேர் கொல்லப்பட்டனர். அப்போது பலரைப் பிணையக்கைதிகளாக ஹமாஸ் மற்றும் அதன் ஆதரவு பாலஸ்தீனக் குழுக்கள் பிடித்தச் சென்றன. இதற்குப் பதிலடியாக இஸ்ரேல், காசா மீது நடத்திய மிகக் கடுமையான தாக்குதலில் 60,000க்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர். தற்போது 49 பிணையக்கைதிகள் ஹமாஸ் பிடியில் இருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், ஹமாஸ் அமைப்பு எவ்யாதர் டேவிட் (24) என்ற பிணையக்கைதியின் காணொளி ஒன்றை வெளியிட்டுள்ளது. அதில், அவர் எலும்பும் தோலுமாக உருக்குலைந்து, பேசுவதற்கே சிரமப்பட்ட நிலையில், சுரங்கப்பாதை ஒன்றில் மண்வெட்டியால் தனக்குத்தானே கல்லறை தோண்டுவது போன்ற காட்சிகள் இடம்பெற்றுள்ளன. அதில் மெல்லிய குரலில் பேசும் அவர், 'நான் இப்போது எனக்கான கல்லறையைத் தோண்டுகிறேன். ஒவ்வொரு நாளும் என் உடல் பலவீனமடைந்து வருகிறது. நேரடியாக நான் எனது கல்லறைக்குச் செல்கிறேன். நேரம் கடந்து கொண்டிருக்கிறது' எனக் கூறி அழுகிறார். (ஐ)

## தமிழ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பாதுகாப்பு அவசியம்." - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினரான முன்னாள் எம்.பி. சமன் ரத்னபிரிய தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதி பதவியை வகிப்பவர் துணிவுடன் முடிவுகளை எடுக்க வேண்டும். அதற்குரிய சுதந்திரம் அவருக்கு வழங்கப்பட்டுள்ளது. உலக நாடுகளிலும் ,ந்த நடைமுறை உள்ளது. எனவே, ஜனாதிபதியால் எடுக்கப்படும் முடிவு 90 வீதமானோருக்குச் சாதகமாக ,ருக்கலாம். 10 வீதமானோர் அதனை எதிர்க்கலாம்.

எனவே, அந்த 10 சதவீதமானோர், ஜனாதிபதி ஓய்வுபெற்ற பின்னர் அவரைப் பழிவாங்க முற்படக்கூடும். அதனால்தான் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு ஓய்வின் பின்னரும் பாதுகாப்பு உள்ளிட்ட வரப்பிரதாசங்கள் வழங்கப்படுகின்றன. ,து உலகளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையாகும்.

குறிப்பாக மஹிந்த ராஜபக்ஷ போரை முடிவுக்குக் கொண்டு வந்த தலைவர். அவரைப் பழிவாங்கும் நோக்கில் சில தமிழ் டயஸ்போராக்கள் செயற்படலாம். உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் வைத்து மஹிந்தவைப் பழிவாங்கக்கூடும். ஆகவே, மஹிந்தவுக்குப் பாதுகாப்பு அவசியம். வரப்பிரசாதங்களில் ஒன்றுதான் பாதுகாப்பாகும்." - என்றார்.

## புலிகளிடமிருந்து....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அந்த அமைப்பிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்த படையினர் போர்க்குற்றவாளிகளாகவும் பார்க்கப்படும் நிலையே தற்போதைய ஆட்சியின் கீழ் காணப்படுகின்றது." - என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ எம்.பி. குற்றஞ்சாட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"வடக்கில் அப்பாவி இளைஞர்களின் கழுத்தில் சயனைட் குப்பிகளைத் தொங்கவிடுவதற்கு நிதி வழங்கிய தமிழ் டயஸ்போராக்களை மிகப்பெரிய முதலீட்டாளர்களாகக் கருதும் அரசு, போரை முடிவுக்குக் கொண்டு வந்த படையினரைக் குற்றவாளியாகப் பார்க்கின்றது. முன்னாள் கடற்படைத் தளபதி சிறையில் உள்ளார்.

விடுதலைப்புலிகள் அமைப்பை ஊக்குவித்தவர்கள் இன்று முதலீட்டாளர்கள், அந்த அமைப்பிடம் இருந்து நாட்டைப் பாதுகாத்தவர்கள் போர்க்குற்றவாளிகளாகியுள்ளனர்.

விடுதலைப்புலிகளால் செய்ய முடியாமல்போன கலாசாரச் சீரழிவைத் தற்போதைய அரசு செய்கின்றது. அதனால்தான் பாடத்திட்டத்தில் இருந்து வரலாற்றுப் பாடத்தைக்கூட நீக்குவதற்கு முற்படுகின்றனர்." - என்றார்.

## ரணிலின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் வாக்குமூலம் வழங்குவதற்காகக் குற்றப் புலனாய்வுத்திணைக்களத்தில் இன்று முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்கவுக்கு நேற்று அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இதனால், ரணில் விக்கிரமசிங்கவின் செயலாளரான சமன் ஏக்கநாயக்க குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இன்று காலை 9.30 மணியளவில் முன்னிலையாகினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் வெளிநாட்டுப் பயணம் தொடர்பில் அவர் வாக்குமூலம் வழங்கிய பின்னர் குற்றப் புலனாய்வுப் திணைக்களத்தில் இருந்து வெளியேறினார்.

ரணில் விக்கிரமசிங்கவின் தனிப்பட்ட செயலாளர் சாண்ட்ரா பெரேராவும் நேற்று மேற்படி விடயம் தொடர்பான விசாரணைக்கு அழைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## சபையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இன்று செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அமர்வின் போது ஒழுங்குப் பிரச்சினையை முன்வைத்த நாமல் ராஜபக்ஷ,

"நிலையியற் கட்டளை 98 எவ்வின் கீழ், நீதிமன்றத்தில் விவாதிக்கப்படும் வழக்கு தொடர்பான ஒரு விடயத்தை நாடாளுமன்றத்தில் விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியாது .

தேசபந்து தென்னக்கோன் விவகாரம் தொடர்பாக உயர் நீதிமன்றத்தில் 9 வழக்குகள் பரிசீலிக்கப்பட்டு வருகின்றன. எனவே, நீதிமன்ற வழக்கின் முடிவு நாடாளுமன்ற விவாதத்தால் பாதிக்கப்படாது என்பதைச் சபாநாயகர் உறுதிப்படுத்த வேண்டும்.

எனவே, இது தொடர்பாக ஒரு அறிக்கையை வெளியிட்டு பின்னர் விவாதத்தைத் ஆரம்பியுங்கள்." - என்றார்.

இதற்குப் பதிலளித்த சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன,

"தொடர்புடைய விதிகளை ஆராய்ந்த பின்னரே, நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த நாள் ஒதுக்கப்பட்டது. இதனால் பிரேரணையை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ள முடியும்." - என்றார்.

இதற்கு மறுப்புத் தெரிவித்து எழுந்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஷ எம்.பி., தேசபந்து தென்னக்கோனைப் பொலிஸ்மா அதிபர் பதவியில் இருந்து நீக்கும் முன்மொழிவு மீதான விவாதத்தை நடத்துவதன் சட்டபூர்வத்தன்மை குறித்து தொடர்ந்தும் கேள்வி எழுப்பி, சபாநாயகர் ஜகத் விக்ரமரத்னவுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டார்.

இதன்போது அரச தரப்பினர் சிலரும் நாமல் ராஜபக்ஷ வுடன் தர்க்கத்தில் ஈடுபட்டனர். எனினும், சபாநாயகர் தான் ஒரு பதிலை வழங்கியுள்ளதாகவும், எனவே விவாதத்தை நடத்த முடியும் எனவும் கூறி விவாதத்தை ஆரம்பிக்குமாறு அரச தரப்பினரைப் பணித்தார்.

---

## ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலத்துக்கு எதிராக சட்டநடவடிக்கை– சாகர காரியவசம்

*ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் சட்டமூலத்துக்கு எதிராக சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் தெரிவித்துள்ளார்.*

*ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் காரியாலயத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.*

*இது தொடர்பில் அவர் தெரிவிக்கையில்,*

*முன்னாள் ஜனாதிபதிகளின் சிறப்புரிமைகளை இரத்துச் செய்யும் வகையில் வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்டுள்ள சட்டமூலத்துக்கு எதிராக உரிய சட்டநடவடிக்கை எடுப்போம்.*

*யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்த முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை இலக்காகக் கொண்டு விடுதலை புலிகள் அமைப்பை மகிழ்விப்பதற்காக இந்த சட்டமூலம் கொண்டு வரப்பட்டுள்ளது.*

*முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்காக மாத்திரம் நாங்கள் போராடவில்லை. எதிர்கால ஜனாதிபதிகளுக்காகவும், தேசியத்துக்காகவும் இந்த சட்டமூலத்துக்கு எதிர்ப்பு தெரிவிக்கிறோம்.*

*இந்த அரசாங்கம் வெறுப்பை மாத்திரம் முன்னிலைப்படுத்திச் செயற்படுகிறது.*

*ஜனாதிபதி அநுரகுமார திசாநாயக்க ஆட்சிக்கு வந்து எதிர்வரும் மாதத்துடன் ஒருவருடம் நிறைவடையவுள்ள நிலையிலும் கடந்த அரசாங்களை மாத்திரம் விமர்சித்துக் கொண்டிருக்கிறார்.*

*ஆனால் கடந்த அரசாங்கத்தின் பொருளாதார மற்றும் அபிவிருத்தி திட்டங்களை மாற்றமில்லாமல் நிறைவேற்றுகிறார்.*

*2029ஆம் ஆண்டு நாங்கள் தான் ஆட்சிக்கு வருவோம். அப்போது தற்போதைய செயற்பாடுகளுக்கு அரசாங்கம் பதிலளிக்க நேரிடும் – எனத் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.*

## ஓட்டோ சாரதி கொலை: சந்தேகநபர் சிக்கினார்!

கொழும்பு, ஓக. 05

கழுத்து வெட்டப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சந்தேகநபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

தெமட்டகொடை, கெட்டபுல பிரதேசத்தைச் சேர்ந்த 32 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது, கொழும்பு, தெமட்டகொடை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தர்மாராம வீதி பிரதேசத்தில் கடந்த ஜூலை மாதம் 24 ஆம் திகதி இரவு கழுத்து வெட்டப்பட்டு ஓட்டோ சாரதி ஒருவர் கொலை செய்யப்பட்டார். கொழும்பு, மாதம்பிட்டி பிரதேசத்தைச் சேர்ந்த 69 வயதுடைய நபரே கொலை செய்யப்பட்டார். இது தொடர்பில் தெமட்டகொடை பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர் தெமட்டகொடை, கெட்டபுல பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளைத் தெமட்டகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கொலையாளி ஒருவர் வாள்களுடன் கைது!

வத்தளை, ஓக. 05

வத்தளையில் மாடி வீடொன்றில் குடும்பஸ்தர் ஒருவரைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்த சம்பவம் தொடர்பில் இளைஞர் ஒருவர் பேலியகொடை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

வத்தளை, அவரகொட்டுவ பிரதேசத்தைச் சேர்ந்த 27 வயதுடைய இளைஞரே கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலைச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வத்தளை – ஹேகித்த பிரதேசத்துக்குக் கடந்த ஜூலை மாதம் 19 ஆம் திகதி ஓட்டோவில் சென்ற கும்பல் ஒன்று மாடி வீடொன்றில் இருந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையைக் கூரிய ஆயுதங்களால் தாக்கிக் கொலை செய்தது.

வத்தளை பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய நபரே இவ்வாறு கொலை செய்யப்பட்டார்.

இது தொடர்பில் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளில், இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய இளைஞர் ஒருவர் வத்தளை, அவரகொட்டுவ பிரதேசத்தில் வைத்து நேற்று திங்கட்கிழமை மாலை கைது செய்யப்பட்டார்.

அவரிடமிருந்து 4 வாள்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன.

இதனையடுத்துக் கைது செய்யப்பட்ட இளைஞர் மேலதிக விசாரணைகளுக்காகப் பேலியகொடை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளைப் பேலியகொடை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

---

# டோங்கிரியா வன தேவதைகள்......

உயிர்நாடியான நியம்கிரி டோங்கர் மலையில் பிரிட்டிஷ் சுரங்க நிறுவனமான வேதாந்தா ரிசோர்சஸ் திறந்த பாக்சைட் சுரங்கம் அமைக்க திட்டமிட்டது.

டோங்கிரியா பழங்குடியின் அனுமதியின்றி, அதன் நதிகளைச் சீர்குலைத்து, மலைகளின் மேற்பரப்பில் இருக்கும் மதிப்பிடப்பட்ட 2 டாலர் பில்லியன் மதிப்புள்ள பாக்சைட்டைப் பிரித்தெடுத்து, ஒரு திறந்தவெளி சுரங்கத்தை உருவாக்க வேதாந்தா நிறுவனம் திட்டமிட்டது.

சுரங்கத்திற்கு அனுமதி பெறுவதற்கு முன்பே, வேதாந்தா நிறுவனம் லான்ஜிகர் நகரில் ஒரு சுத்திகரிப்பு நிலையத்தை உருவாக்கியது, மேலும் மலைகளில் இருந்து பாக்சைட்டை சுத்திகரிப்பு நிலையத்திற்கு நேராகக் கொண்டு வரும் கன்வேயர் பெல்ட்டில் வேலை செய்யத் தொடங்கியது. காடுகளைப் பயன்படுத்தக் கூடாது என்கிற நிபந்தனையுடன் சுத்திகரிப்பு ஆலைக்கு அரசு ஒப்புதல் அளித்திருந்தது. சுத்திகரிப்பு நிலையம் கிராமத்தை முற்றிலுமாக அழித்தது, நூற்றுக்கும் மேற்பட்ட குடும்பங்களை உள்ளூரில் 'புனர்வாழ்வு குடியேற்றத்திற்கு' இடம்பெயர்ந்தது.

அவர்களின் விவசாய நிலங்களைப் பறித்துக்கொண்டது. சுத்திகரிப்பு நிலையத்தின் மாசுபாடு காரணமாகத் தோல் பிரச்சினைகள், கால்நடை நோய்கள் மற்றும் பயிர் சேதங்கள் உருவாகின. சுத்திகரிப்பு நிலையத்தின் முக்கியக் கழிவுப் பொருளான 'சிவப்பு சேறு' என்கிற ஒரு நச்சுக் குழம்பு வெயிலில் மெல்லிய தூசியாக காய்ந்து அபாயகரமாக மாறி நிலத்தடி நீரை மாசுபடுத்தியது மட்டுமல்லாமல் அதன் நச்சுக் கழிவுகள் வம்சதாரா ஆற்றிலும் கசிந்தன.

தங்களின் உயிருக்கும் மேலான நியாம்கிரியைப் பாதுகாக்க பத்து ஆண்டுகளுக்கு டோங்ரியா கோந்த் பெண்கள் டோங்ரியா ஆண்களுடன் தோளோடு தோள் நின்று போராடி வந்தனர். ஒரு முறை வேதாந்தாவின் புல்டோசர்கள் மலையை அழிக்காமல் தடுக்க மலையின் அடிவாரத்தைச் சுற்றி மனிதச் சங்கிலியை உருவாக்கினார்கள். 1,600 கிலோமீற்றர்களுக்கு மேல் டெல்லிக்குப் பயணம் செய்து, போராட்டத்தில் கைது செய்யப்பட்ட தங்கள் தலைவர்களை பொலிஸார் விடுவிக்க வேண்டும் என்று கோரியவர்கள் டோங்கிரியா இனப் பெண்கள்.

எங்கள் காடுகளை யாருக்கும் கொடுக்க மாட்டோம் என்று உலகத்திற்கு உரைத்தார்கள். இதற்காக இங்குள்ள பெண்கள் அனைவரும் சிறைக்குச் செல்லவும் தயாராக இருந்தார்கள். இவர்களின் கடினப் போராட்டத்திற்குப் பலனாக, வேதாந்தா நிறுவனம் சட்டத்தை மீறியதாகவும், டோங்ரியா கோண்டின் உரிமைகளைப் புறக்கணித்ததாகவும் ஓர் அறிக்கையுடன், சுரங்க மேம்பாடு 2010 இல் இந்திய அரசாங்கத்தால் நிறுத்தி வைக்கப்பட்டது. 2006 வன உரிமைச் சட்டம் கீழ் பழங்குடியினர், வனக் குழுக்களின் உரிமைகளுக்கு வழங்கப்படும் பாதுகாப்பைக் காரணம் காட்டி, உள்ளூர் பழங்குடியினரைக் கலந்தாலோசிக்க ஒடிசா அரசுக்கு இந்திய உச்ச நீதிமன்றம் உத்தரவிட்டது. 2014 இல் இந்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் காலநிலை மாற்றம் அமைச்சகம் சுரங்கத்திற்கான அனுமதியை மறுப்பதாக அறிவித்தது.

டோங்ரியா பழங்குடி பெண்கள் வேதாந்தாவுக்கு எதிராக உள்நாட்டிலும், தேசிய அளவிலும், சர்வதேச அளவிலும் எதிர்ப்புத் தெரிவித்தனர். அவர்கள் சாலைத் தடைகளை நடத்தினர். எக்காரணத்திற்கும் அவர்கள் போராட்டத்தைக் கைவிடவில்லை. அவர்களின் மன உறுதியும் விடாமுயற்சியும் அவர்களுக்கு சர்வதேச அங்கீகாரத்தைப் பெற்றுத் தந்துள்ளதுடன், நாடு முழுவதும், உலகம் முழுவதும் உள்ள பழங்குடி மக்களைத் தங்கள் வனங்களைக் காக்க ஊக்கப்படுத்தியுள்ளது.







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 05.08.2025 வெளியிடப்பெற்றது.